தேதி :ஜனவரி 22, 2014

# போன காங்கிரஸ், கலகக்கார ஆம் ஆத்மி கட்சி, இல்லவே இல்லாத மூன்றாவது அணி ஆகியவற்றின் தாக்கம்

**- திரு.அருன் ஜெய்ட்லி**

*எதிகட்சி தலைவர் (மாநிலங்களவை)*

கடந்த சில நாட்கள், நாட்டில் உருவாகிவரும் அரசியல் சூழ்நிலை பற்றிய் உள்ளுணர்வை வழங்கியுள்ளன. .பா.ஜ.கவில் இருப்பவர்களான எங்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் உறசாகமளிக்கும் விதத்திலேயே இருக்கின்றன.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவின அரசியலில் காங்கிரஸே ஆதிக்கம் செலுத்தியுள்ளது.. கடந்த சில வருடங்களில் ஆளும் ஐ.மு.கூ கூட்டணியின் செயல்பாடு உறுதியற்றதாகவும் உதவேகமற்றதாகவும் இருந்துவருகிறது. 2014அம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான ஓட்டத்தில் காங்கிரஸின் அனைத்து தலைவர்களும் மக்கள் செல்வாக்கு என்னும் விஷயத்தில் நரேந்திர மோடியைவிட மிகவும் பின் தங்கி இருப்பதை அனைத்து கருத்துகணிப்புகளும் சுட்டிக்காட்டுகின்றன. பல மாநிலங்களில் தனது வலிமையை காங்கிரஸ் இழக்கப் போகிறது. 2009இல் பெற்ற வாக்குகளை விட அதிகமான வாக்கு எண்ணிக்கையை எந்த மாநிலத்திலும் அக்கட்சி பெறப் போவதில்லை. தேர்தல் நெருங்கும் வேளையில் பா.ஜ.கவின் முன்னணியில் ஓடுபவருக்கான சாதக அமசம் இன்னும் அதிகமாக ஒன்றிணைகக்ப்பட்டுவிடும். . கூடுதலாக, பா.ஜ.க வலிமையுடன் இருந்திராத மாநிலங்களிலும் பா.ஜ.கவின் வாக்கெண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருக்கிறது. . அண்மையில் நடந்து முடிந்த கருத்து கணிப்புகளின் படி தமிழகம். ஒடிஷா, மேற்கு வங்கம். ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட கட்சியின் செல்வாக்கு குறைவாக இருந்த மாநிலங்களில் பா.ஜ.கவுக்கான வாக்குகள் அதிகரித்திருக்கின்றன. தேர்தல் . ஜனாதிபதி தேர்தலைப் போல் ஆனவுடன் நரேந்திர மோடியை பிரதமராக்குவதற்கான எழுச்சி வாக்கெண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும்.

பாஜகவின் மரபார்ந்த விமர்சகர்கள் இதுவரை காங்கிரஸுக்குப் பின் அணி திரண்டார்கள். அவர்கள் காங்கிரஸ்தான் பா.ஜ.க அல்லது மோடியை தடுத்து நிறுத்த வல்ல ஆயுதம் என்ற நம்பிக்கையை இப்போது இழந்துவிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ப.ஜ.கவின் எழுச்சி ஆம் ஆத்மி கட்சியால் தடுக்கப்படும் என்று நினைத்தார்கள். ஆனால் ஆம் ஆத்மி கட்சி, அரசியலில் ஒர் வாரம் என்பது மிக நீண்ட காலம் என்ற பழமொழியை உண்மையாக்கிவிட்டது. அது ஏற்கத்தகாத பொறுப்பற்ற நடத்தையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு எஸ்.ஹெச்.ஓவை பணிமாற்றம் செய்யாமல் இருப்பது இந்தக் கட்சியை குடியரசு தின கொண்டாட்டங்களில் தடை ஏற்படுத்தும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. காங்கிரஸ் கட்சி ஆம் ஆத்மி கட்சியை எப்படிக் கையாள்வது என்ற குழுப்பத்தில் இருக்கிறது. அது விமர்சிக்க விரும்புகிறது ஆனால் மோத விரும்பவில்லை..எனவே அது ஒரு வலுவற்ற உயிர் காத்துக்கொள்ளும் வாய்ப்பை ஆம் ஆத்மிக்கு வழ்ங்கியது. ஆம் ஆத்மியும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டது. . ஆம் ஆத்மி கட்சியின் பொறுப்பற்ற நடத்தையும் காங்கிரஸ் கட்சியின் சரணடையும் குணமும் நிலையான ஆட்சியை வழங்கக் கூடிய ஒரு கட்சியின் தேவையை வலியுறுத்துகின்றன.

அண்மைய போக்குகல் மக்களவைத் தேர்தலில் ஒரே ஒரு கட்சிதான் எளிதாக மூன்று இலக்கத்தை அடையும் என்று சுட்டிக்காட்டுகின்றன. முன்னணியில் இருக்கும் கட்சிக்கும் அடுத்த இடத்தில் இருக்கும் கட்சிக்கும் இடையிலான தூரம் மிக அதிகமானதாக இருக்கும். மற்ற அனைத்து கட்சிகளுக்கும் ஒரு சில தொகுதிகள் மட்டுமே கிடைக்கும். பின்பு யார்தான் ஆட்சியமைப்பார்கள்? வாக்காளரின் தெரிவை தீர்மானிக்கப்போவது இந்தக் கேள்விக்கான விடைதான். . மிகச் சிறிய மையத்தைக் கொண்ட எண்ணிலடங்கா வெவ்வேறான குழ்க்களையும் கொண்டிருக்கும் ஒரு கட்சியை இந்தியாவால் பொறுத்துக்கொள்ள முடியுமா. இந்தக் கேள்விக்கான பதில் இந்தியாவின் தேவை பொறுப்புள்ள ஆட்சி, அரசியல் நிலைத்தன்மை மற்றும் புத்துருவாக்கம் செய்யப்பட்ட வளர்ச்சி ஆகியவையே என்ற தவிர்க்க முடியாத முடிவுக்குக் கொண்டுசெல்லும் அது தனது முதலீட்டு சுழற்சியை தூசி தட்டி எடுக்க வேண்டும் . இதுபோன்ர அனைத்து பரிசீலனைகளும் முன்னணியில் இருபப்வருக்கு கூடுதல் சாதகத்தைப் பெற்றுத் தரும். தோற்றுப் போன காங்கிரஸ், கலகக்கார ஆம் ஆத்மி கட்சி மற்றும் இல்லவே இல்லாத மூன்றாவது அணி ஆகியவை பா.ஜ.க மற்றும் மோடியின் எழுச்சிக்கு பாங்காற்றுபவையாக முடியும். .

ôôôôô